மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இதுகுறித்து நெடுஞ்சாலை-கிராமப்பணி தலைமைப் பொறியாளரும், பாசனம் தலைமைப் பொறியாளரும் கலந்துபேசி முடிவு செய்யப்படுகின்றன. முடிவு விரைவாக எடுக்கப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Whereas this Buckingham Canal runs across the City of Madras and whereas there are many bridges over it which are narrow and which are causing inconvenience to pedestrians and wheel traffic, will the Government think of a comprehensive scheme of widening all the bridges where Buckingham canal runs and improving all those bridges? Would it be possible then to negotiate the canal by ferry boats as well as steam boats, if ever we think of launching upon such a thing?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பல கேள்விகளை கனம் உறுப்பினர் அவர்கள் போட்டுவிட்டார்கள். எனவே தனித்தனியாக கேள்வி போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத காரணத்தினால் என்னால் பதில் சொல்ல இயலவில்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: எல்லோரும் பாராட்டக்கூடிய அளவிலே கூவத்தைச் சீர்திருத்தம் செய்து வருகிறோம். பக்கிங்காம் கால்வாயையும் திருத்தம் செய்ய இருக்கிறோம். அப்படிச் செய்கிற நேரத்திலே ஆங்காங்குள்ள பல பாலங்கள் கார்ப்பரேஷன் பொறுப்பில் இருப்பதால் கார்ப்பரேஷனோடு தொடர்புகொண்டு அந்தப் பாலங்களையெல்லாம் விரிவுபடுத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அத்தகைய திட்டமும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

சுற்றுலா செல்லும் மாணவர்களுக்கு பேருந்துகள்

*** 582 வினா.—திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுற்றுலா செல்லும் பள்ளிக்கூட, கல்லூரி மாணவ மாணவிகளுக்கு சர்க்கார் குளுகுளு கார்கள், சொகுசு பஸ்கள் தயாரித்து குறைந்த வாடகையில் தர அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. கே. போஜன்: தலைவர் அவர்களே, குளுகுளு கார்களும், சொகுசு பஸ்களும் இல்லாமலிருந்தாலுங்கூட சர்க்கார் சாதாரண பஸ்களை மாவட்டத்திற்கொன்றாக ஏற்பாடு செய்துகொடுத்தால் படிக்கின்ற குழந்தைகளும் மற்றவர்களும் சுற்றுலா செய்வதற்கு வசதியாக இருக்கும் என்பதால் அதைச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்வி அரசாங்க பஸ்கள் குறைந்த வாடகைக்குத் தரப்படுகிறதா என்பது. குறைந்த வாடகைக்குத் தரப்படுகிறது. அரசாங்கத்திடம் 30 சீட்டுகள் உள்ள லக்சுரி கோச் இருக்கிறது. இதைக் குறைந்த கட்டணத்தில் கொடுக்கிறோம். சாதாரண பஸ்களையும் குறைந்த கட்டணத்தில் மாணவர்களுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம். மாவட்டவாரியாகக் கொடுப்பதற்குக் குறிப்பு இல்லை.

திரு. நா. காசிராமன்: தலைவர் அவர்களே, அரசாங்கத்திடம் ஏர்-கண்டிஷன் செய்யப்பட்டிருக்கிற, கார்களும் லக்சுரி பஸ்களும் எத்தனை இருக்கின்றன என்று கூற முடியுமா?

1970 மார்ச் 28]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏர்-கண்டிஷண்டு இல்லை. லக்சுரிதான் ஒன்று இருக்கிறது.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் பஸ் களைக் கொடுக்க முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கல்வித் திட்டத்தில் சுற்றுலா ஒரு கல்வியாகப் போதிக்கப்படும்பொழுது இதைப்பற்றி மீண்டும் அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாவட்டத்திற்கு ஒரு பஸ் கொடுக்கப்படுமா என்று அவர்கள் கேட்டார்கள். மாவட்ட வாரியாக மாணவர்கள் சுற்றுலா செல்வதற்காகப் பஸ்கள் வேண்டுமென்றால் அந் தந்தக் கல்வி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமிழக அரசு போக்குவரத் துடன் தொடர்புகொள்வார்களானால் ஏற்பாடு செய்யலாம். இப்பொழுது செய்து வருகிறோம். சாதாரண பஸ்கள் குறைந்த கட்டணத்தில் இப் பொழுது கொடுத்து வருகிறோம்.

திரு. மு. ச. சிவசாமி: தலைவர் அவர்களே, ஐரோப்பிய நாடுகளில் வெளிநாடுகளிலிருந்து சுற்றுப்பயணம் செய்ய வருகிறவர்களுக்காக நவீன வசதிகளடங்கிய பஸ்களை வைத்திருக்கிறார்கள். அதைப்போன்று வெளி நாடுகளிலிருந்து வருகின்ற, வெளி மாநிலங்களில் இருந்து வருகின்ற சுற்றுப்பயணிகளுக்கு நம்முடைய மாநிலத்திலே நவீன வசதிகள் அடங்கிய உல்லாச பஸ்களைத் தயாரிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அங்குள்ள நிலைமைபற்றி எனக்குத் தெரியாது. நம்முடைய நாடு ஏழ்மை நாடு. இந்தியாவிலேயே நம்முடைய அரசுப் போக்குவரத்துதான் வசதிகள் உள்ளதாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

State Transport workers

* 583 *Q*.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government has any proposal to conduct classes for State Transport bus conductors as to how they have to move with the public; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையில் பயணிகள் துணைவர்களாய் (Conductors) நியமிக்கப்படுவோர், நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் 21 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். பேருந்துகளில் பயணம் செய்யும் பொது மக்களுடன் பண்புடன் பழகுவதற்கு அப் பயிற்சிக்கால அளவில் போக்கு வரத்துத்துறை அவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றது. மேலும் இத்துறையி லுள்ள பொதுமக்கள் தொடர்பு அதிகாரி, தொழிலாளர் கல்வி-மத்திய வாரியத்தினால் நடத்தப்படும் தொழிலாளர் கல்வித் திட்டத்தின்கீழ் பொதுமக்களுடன் தொடர்பு கொள்வது குறித்துத் தொழிலாளர்களுக்கு வகுப்புகள் நடத்துகின்றார்.

DR. H. V. HANDE: In view of the fact that sometimes buses skip over some stops and in view of the fact that this is one of the major complaints among the several complaints, will the Government think of dividing the whole of the complaints into particular groups and evolve a method by which these things could be solved so that there is smooth relationship between conductors and passengers?